Emperor Journal of Classical Tamil Studies
ISSN: 2582-2977
www.ejcts.mayas.info
DOI-http://dx.doi.org/10.35338/EJCTS.2019.1205
© மாயாஸ் பதிப்பகம்

EJCTS
www.ejcts.mayas.info

Volume- I Issue- 1 January - 2022

# அத்தியாயம் - 1

## நாட்டுப்புற இலக்கியங்களில் - "இறப்பும் தெய்வம் ஆக்கலும்"

*டாக்டர். டி. அங்காளம்மாள்*
*உதவி பேராசிரியர், தமிழ்த் துறை,*
*சேக்ரட் ஹார்ட் கலை மற்றும் அறிவியல் கல்லூரி,*
*பேரணி - 605 651.*

## *முன்னுரை*

சமய நம்பிக்கைகள் முன்வரலாற்றுக் காலந்தொடங்கி இன்று வரை மனித சமுதாயம் எங்கெல்லாம் வாழ்ந்துள்ளதோ அங்கெல்லாம் மனித வாழ்வியலோடு வாழ்ந்து வருகின்றன. உலகத்திலிருந்துஅறவே துண்டிக்கப்பட்டுத் தனிமையில் வாழும் பழங்குடிகளின் சமய நம்பிக்கைகள் முதல் பெரும் சமுதாயமாக வாழும் நவீன மக்களின் சமய நம்பிக்கை வரை அறிய முடிகிறது. பொதுவாக கிராம வாழ்க்கையை நாட்டுப்புற வாழ்க்கை என்று சொல்வதுண்டு. அந்த வாழ்க்கையோடு இணைந்தது தான் நாட்டுப்புறச் சமயம் ஆகும்.

தொன்மைச் சமயம் (Pசiஅவைiஎந சுநடழபழைn) தோன்றிய முறையை விளக்க முற்பட்ட முதல் மானியவியல் கோட்பாடே ஆவி வழிபாடு (யுniஅளைஅ) ஆகும். சமயத்தின் தொடக்கம் ஆவிகளின்பால் ஏற்பட்ட நம்பிக்கையிலிருந்து தோன்றியது. சமயம் என்பதற்கு நேராக வழங்கும் சொல் இரு பொருளில்

வழங்கப்படுகின்றன. ஒன்று குறிசொல்வது, அதாவது இறைவன் திரு உள்ளத்தை அறிவதற்குச் சில நிகழ்ச்சிகளையும் காட்சிகளையும் அடையாளமாகக் கொள்வது. முற்றொன்று இறைவனோடு ஒன்றுபடுவது அல்லது மீண்டும் பிணைப்பது என்பதாகும் எனக் கலைக்களஞ்சியம் குறிப்பிடுகிறது. (தொ.பரமசிவன், 1995: பக்109)

## நாட்டார் சமயம் - இந்துமதம்

இந்துப் பெருமதத்தின் தெய்வங்களையும், நாட்டார் சமயத்தின் தெய்வங்களையும் கருத்தியல் நோக்கில் அணுகும் போது இத்தெய்வங்கள் இயற்கைப் பண்பாடு (யேவரசந - ஊரடவரசந) என்னும் போக்கில் பெற்றுள்ளன என்னும் கருத்து முன்னிலை பெறுகிறது. நாட்டார் தெய்வங்கள் பெரும்பான்மையாக வீரன், கன்னிதேவி தெய்வங்களாகவே உள்ளன. இவையாவும் நன்மை, தீமை இரண்டையும் செய்யும் இரட்டை நிலை சார்ந்தவை. (யுஅடஙயடநவெ) இத்தன்மையானது இயற்கை சார்ந்தது
(சீ. பக்தவத்;சலபாரதி 2002 பக் - 242)

பெருமரபுத் தெய்வங்கள் இந்து சமயத்தைச் சார்ந்தன. இது மரபுத் தெய்வங்களாகிய கிராம் தெய்வங்கள் திராவிடச் சமயத்தைச் சார்ந்தன. ஆரியத் தெய்வங்கள் தெய்வீக வரலாற்று மரபைக் கொண்டவை. அத்தெய்வங்கள் புராண இதிகாச மரபைக் கொண்டவை. ஆனால் சிறு மரபு தெய்வங்கள் எப்படியானாலும் அவ்வூரிலேயே தோன்றியவையாகும். இவர்கள் பிறந்து வளர்ந்து இறந்தவர்களின் ஆவியாகவே இருக்கிறார்கள். இவ்வாறு சிறு மரபில் தோன்றிய நாட்டார் தெய்வங்கள் எல்லாம் பெருமரபாக்கப்பட்டுள்ளார்கள். அவர்களுள் அழகர், சொக்கர், மீனாட்சி, முருகன் இவர்கள் அனைவரும் வெள;வேறு காலங்களில் மக்களிடையே வாழ்ந்து மடிந்தவர்களேயாவர். இவர்கள் நாட்டுப்புறத் தெய்வங்கள்தான் திராவிடத்தெய்வங்கள் தான் இன்று இவர்கள் இந்துத் தெய்வங்களாக்கப்பட்டிருக்கிறார்கள். மேலும் இவர்கள் மக்களால் தெய்வங்களாகக் கொண்டாடப்படுகிறார்கள். நாட்டார் சமயத்திலுள்ள இறந்தோர் வழிபாடானது முன்னோர் வழிபாட்டுடன் தொடர்புடையது என்று இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த சமூகவியலாளர் ஹெர்பர்ட் ஸ்பென்சர் என்பவர் முன்னோர் வழிபாடு இறந்தோர் வழிபாட்டுடன் தொடர்புடையது என்று கூறினார். இறப்பு என்ற நிகழ்ச்சியினைக் கண்டு ஆதிகால மனிதன் அஞ்சினான். அத்துடன் இறந்தவர்கள் ஆவி வடிவில் வருவதாகவும் நம்பினான். இந்நம்பிக்கையே இறந்தோர் வழிபாட்டிற்கு அடிப்படையாக அமைந்தது. ஆவி வடிவில் வாழும் மூதாதையர்களும், குலத் தலைவர்களும் தங்களுக்கு உறுதுணையாக நிற்பார்கள் என்று ஆதிமனிதன் நம்பினான். வாழும் போது ஆற்றலுடையவர்களாக விளங்கியவர்கள் இறந்த பின்வரும், தொடர்ந்து

வலுவுடையவர்களாக விளங்குவார்கள் என்றும் அவர்கள் உதவியோ, தொல்லையோ தருவார்கள் என்று நம்பினான். இதனைத் தொடந்து அகால மரணமடைந்தவர்கள், தற்கொலை, விபத்து மற்றும் போரில் இறந்தோர், கொலை செய்யப்பட்டோர் ஆவிகளின் மீது கொண்ட அச்சத்தின் காரணமாகவும், அன்பின் காரணமாகவும் அவர்களின் ஆவிகளை வழிபடத் தொடங்கியதாக அறியப்படுகிறது. உலகில் நல்லதும் கெட்டதுமான ஆவிகள் இருப்பதாகவும் நல்ல ஆவி நன்மை செய்வதாகவும், கெட்ட ஆவிகள் தீமை செய்வதாகவும் நம்பினான்.

## இறப்பும் தெய்வம் ஆக்கலும் - ஆண்தெய்வங்கள்

போரில் இறந்த வீரர்களின் நினைவாக நடப்பட்ட நடுகற்களை ஊர் மக்களும் போர் மறவர்களும் தெய்வமாக வழிபட்ட செய்தியினைச் சங்க இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. நடுகற்களைத் தவிர கடவுளர் எவரும் இல்லையென்று புறநானூற்றுப் பாடலொன்று இவ்வாறு குறிப்பிடுகின்றது.

ஒன்னாத் தெவ்வர் முன்னின்று விளங்கி
ஒளிறேந்து மருப்பிற் களிறெளிந்து வீழ்ந்தனக்
கல்லே பரவினல்லது
நெல்லுக்குப் பரவுங் கடவுளுமிலவே... (புறம் 335 : 9-12)

போரில் இறந்துபட்ட வீரர்களை நினைத்து நடப்பட்ட இத்தகையை நடுகற்களுக்கு மயிற்பீலி சூட்டி, நெல்லிலிருந்து தயாரிக்கப்பட்ட கள்ளைப் படையலாகப் படைத்துச் செம்மறியாட்டுக் குட்டியினைப் பலி கொடுத்துத் துடி முழக்கத்துடன் வழிபாடு நிகழ்த்தினர். போரில் வீர மரணம் அடைந்தோர், சிறந்த செயல் புரிந்தோர் ஆகியோரின் புகழ் உலகில் என்றும் நிலைத்து நிற்கும் வண்ணம் நடுகல் நடுவர். சங்க காலத்தில் ஆநிரையினை மீட்டோர், போரில் இறந்தோர். வடக்கிலிருந்து உயிர் நீத்தோர் போன்றோர்க்கு நடுகல் நடப்பட்டன.

## நடுகல் நடுவதன் நோக்கம்

ஒருவன் தன்னுடைய வாழ்நாள் முடியும் முன்பே இறக்க நேரிடின் அவன் ஆவி மேலுலகம், செல்லாமல் பூமியிலேயே உலவும் என்று நம்பியதால் நடுகல் நட்டு வழிபட்டனர் என்பதும் அறியப்படுகிறது. இயல்பான இறப்பு, கொலை, விபத்து, தற்கொலை, ஆகிய காரணங்களால் மரணமடைந்தவர்களே பெரும்பாலும் வழிபாட்டுக்குரியவர்களாக ஆக்கப்படுகின்றார்கள். நாட்டுப்புறக் கதைப்பாடல்களின் மிகப் பெரும்பான்மையான கதைத்தலைவர்கள் போரிட்டு இறக்கிறார்கள் அல்லது கொல்லப்படுகிறார்கள் இவர்களையும் சோகக் கதாபாத்திரங்களாகவே கருதலாம்.

ஐவர் ராஜாக்கள் கதையில் தலைவன் குணசேகரன், ராமப்பய்யன் கதையில் வரும் பகைவன் சடையத்துவன், அவனை எதிர்த்து உயிர்விடும் இரவிக்குட்டி, கான்சாகிப், கட்டபொம்மு, ஊமைத்துரை, மருது சகோதரர்கள் இவர்கள் யாவரும் சோகக் கதாப்பாத்திரங்களே, இவர்கள் வரலாற்றுச் சக்திகளை எதிர்த்துப் போராடி உயிர்விட்டவர்கள். தங்களை மீறிய மாபெரும் சக்திகளோடு துணிவாகப் போராடி உயிர்விட்டவர்களது வீரம்காரணமாக சோகமுடிவையும், தோல்விகளையும் மீறி மக்கள் மத்தியில் தெய்வங்களாக மாறி இருக்கிறார்கள்.

## நாட்டார் தெய்வங்களை வழிபடக்காரணங்கள்

நாட்டார் தெய்வங்களை வழிபடுவதற்கு பல காரணங்கள் உண்டு ஆனால் அக்காரணங்களில் அச்சமே முதன்மை பெருகிறது. இந்நாட்டுப்புறத்தெயவங்கள் சீற்றம் உனயான என்றும், தீங்கு விளைவிக்க கூடியவை வுறளைவிக்கக் கூடியவை என்றும் மக்களால் நம்பப்படுகிறது. இத்தெய்வங்களை இறப்பின் அடிபடபடையில்.

- கொலையுண்டு இறந்தற்தோருக்காக உருவானவை
- விபத்தில் இறந்தோருக்காக உருவானவை
- பிறரைக் காக்கும் முயற்சியால் உருவானவை

என்று மூன்று வகையாகப் பருக்கலாம். இவற்றுள் முதல்வகையைச் சேர்ந்த தெய்வங்களே அதிகமாக உள்ளன. மனித சக்திக்கு மேற்பட்ட மற்றொரு சக்தி உலகை ஆட்டிப் படைப்பதற்காக அவர்கள் கருதினார்;, உலகில் நிகழும் நன்;மைக்கும் தீமைக்கும் முதற்காரணமாக இருப்பது தெய்வசக்தியே என எண்ணியதால் எல்லா வினையிலும முதலில் தெய்வத்தைப் போற்றும் பண்பை மக்கள் மேற்கொண்டனர். தெய்வததை வணங்குதல் முதற்கண் அச்சத்தால் மக்களிடையேவிளைந்த செயல் இதனால் அச்சம் வருத்தம் என்னும் பொருள் அணங்கு, சூர், பேய் முதலிய பெயர்களால் தெய்வங்களைக் குறிப்பிடலாயினர். தமக்கு அச்சத்தை விளைவித்த பல பொருட்களுள் பெருஞ்;சக்தி படைத்தன என்றும் கொண்டனர். இதனால், காடு, மலை, மரம், கடல், முதலியவற்றுள் இருப்பதாக நம்பி வழிபாடு செய்தனர்.

## இறப்பும் தெய்;வம் ஆக்கலும் பெண்தெய்வங்கள்

துமிழகத் தென் மாவட்டங்களில் நாயக்கர் அரசின் தோற்றத்தை அடுத்துப் பாளையக்காரர்;கள் உருவான பின்னர், சாதிய அமைப்புகளிலும் நாட்டார் மரபிலும் ஏற்;பட்ட மாற்றங்கள் பெண் தெய்வவழிபாட்டின் பாதிப்பில் காணலாம். இந்தக் காலக்கட்டங்களில் அகால மரணமடைந்த பெண்,

தெய்வமாக வழிபாடு செய்யப் பெறுவது பரவலாக இருந்திருக்கிறது பெண்கள் அகால மரணமடைவதற்கான காரணங்கள் பல அவற்றுள்

1. சாதி, மணமறுப்பின் காரணமாகக் கொல்லப்படுதல் அல்லது தற்கொலை செய்து கொள்ளுதல்
2. பாலியல் பலாத்காரத்தால் தற்கொலை செய்து கொள்ளுதல்
3. செய்யாத குற்றங்களுக்குகாகத்; தீயில் விழுந்து இறத்தல்

போன்ற முக்கியமானவையாகக் கருதப் பெறுகின்றன. திருமணமான தெய்வங்களை மனைவித் தெய்வங்கள் என்றும், திருமணமாகாத தெய்வங்களை கன்னித் தெய்வங்கள் என்றும் திருமணமாகி கணவருடன் இல்லாத தெய்வங்கள் “தேவிதெய்வங்கள்” என்று மூன்று வகையாகப் பிரக்கலாம் ( சீ. பக்தவத்சல பாரதி 2002: பக் 221) மனைவித் தெய்வங்களைவிட கன்னித்தெய்வங்கள்; ஆக்ரோஷநிலையில் மக்கள்.

இத்தெய்வங்களைத் துடியான தெய்வங்கள் என்றும் அழைக்கிறார்கள்இத் தெய்வங்களுக்குப் பொங்கலிட்டு நேர்த்திக்கடன் செலுத்தி வழிபாடு செய்ய வேண்டும்.இல்லையென்றால,; கடுமையான துன்பங்களைச் சந்திக்க நேரிடும். ஆண்களின் ஆதிக்கத்திலுருந்து மீள முடியாமல் பல பெண்கள் தீப்பாய்ந்திருக்கிறார்கள். இவர்களைத் தென்மாவட்டங்களில் “சீலைக்காரி” அம்மன் என்றும், புதுவை ஒன்றியத்தில் தீப்பாய்ந்தம்மன் என்றும் அழைக்கிறார்கள். கணவனின் சிதையில் பாய்ந்த பெண் அவளுடைய தாயின் குடும்பம், தந்தையின் குடும்பம், கணவரின் குடும்பம் ஆகிய மூன்று குடும்பங்களையும் தூய்மைபடுத்தப்டுகிறாள் என்று நம்பப்பட்டது. கம்பராமாயணத்தில் கூட, தசரதன் இறந்தபோது கோசலை கைகேயி, சுமித்திரை மூவரும் நீங்களாக அறுபதினாயிரம் மனைவியர் தீக்குளித்ததாகக் கூறப்படுகிறது. இவ்வாறு எரிமூழ்கும் பெண்களுக்க ஏனையோர் கோயில் எடுத்து வழிப்பட்டார்கள் நோயுற்ற காலத்திலும் துன்புற்ற காலத்திலும் இப்பெண்களிடம் அருள் வேண்டி நின்றனர் இவர்கள் உடன் கட்டை ஏறிய இடத்தில் நினைவுச்சின்னங்கள் எழுப்பட்டன. இன்றும் இந்நினைவுச் சின்னங்களுக்கு மக்கள் பொங்கலிட்டு வழிபாடு நிகழ்த்துவது வழக்கமாக இருக்கிறது, இவர்கள் தெய்வமாக்கப்பட்டதற்கான காரணங்;கள் பல, அவை,

- கொலையில் உதித்த தெய்வங்கள்
- கனவுமூலம் தன்னை அறிமுகப்படுத்தியவர்கள்
- அம்மைநோயால் இறந்தவர்கள்
- இயற்கை மரணமடைந்தவர்கள்
- பிறப்பிலே தெய்வமாகப் பிறத்தல்
- பிடிமண் தெய்வமாக வழிபடுவது

போன்ற காரணங்களுக்காக இறந்துத்; தெய்வநிலையை அடைந்துள்ளார்கள்.;

## முடிவுரை

சமுதாயத்திற்கு நன்;மை புரிந்தவர்கள், நல்லவர்கள், மகான்கள் போன்றோர் n;தய்வநிலைக்கு உயர்கின்றனர். என்ற பொதுகருத்து நிலவுகிறது. இது உண்மைத்தான் ஆனால் திருடர்கள், ரௌடிகள் கூட்டுதெய்வமாக்கப்படுகின்றனர் என்பதையே நாட்ப்புற இலக்கியங்கள் தெளிவுபடுத்துகின்றன. நல்லது செய்து வாழ்ந்த மனிதர்கள் இருக்கும் போது மதித்தது போலவே இறந்த பின்னும் அவர்கள் ஆவி நமக்க உதவ வேண்டும் என்ற நோக்கத்தில் வழிபாடு அமைகிறது. இவ்வாறே கெட்டவர்கள் இறக்கும்போது நமக்குத் தொல்லைக் கொடுத்தது போலவே இறந்தபிறகும் தொல்லைக் கொடுக்ககூடாது என்பாறககாகவும் சங்ககாலமுதல் சமகாலம் வரை இறந்தவர்களை வழிபடுகின்றார்கள்.

## துணைநுற்பட்டியல்


1. ச. பக்தவத்சலபாரதி, 1990 பண்பாட்டு மானிடவியல்
2. சீ. பக்தவத்சலபாரதி, 2002, தமிழர் மானிடவியல்.
3. புரமசிவம், தொ. 1989. ஆழகர் கோவில்
4. இராமசாமி, துளசி, 1985, நெல்லை மாவட்ட நாட்டுப்புறத் தெய்வங்கள்.
5. சுpவசுப்பிரமணியன், ஆ. 1987, தமிழக நாட்டார் சமய ஆய்வு.